IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.342/2023

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | SILAMBARASAN |
| FATHER'S NAME | : | DURAIRAJ |
| VILLAGE | : | GUDIYATHAM |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 10th day of February 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பேர்ணாம்பட்டு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2018 ஆம் வருடம் பேர்ணாம்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.குப்பன் என்பவர் பணிசெய்த விவரங்கள் எனக்கு தெரியும். அவர்ருடன் பணியாற்றிய அனுபவம் இருப்பதாலும், அவரது கையொப்பம் எனக்கு பரிட்சயம் என்பதாலும் அவர் தற்போது பணி ஓய்வுபெற்றுவிட்டார் என்பதாலும் அவர் சார்பாக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 12.03.2018 அன்று காலை 12.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் குப்பன் நிலைய பொறுப்பில் இருந்தபோது பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்படி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையிலிருந்த சையத் ஜாபர், த/பெ.சையத் அல்லா பக்ஷ் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.116/2018 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(2) என முதல் தகவல் அறிக்கை பதிவு அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

அன்றைய தினமே பகல் 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் அஷ்ரப் மற்றும் முகமது ஷெரிப் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றார். பின்னர் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட சுமார் 3 அடி நீளமுள்ள மர தடி 4 மற்றும் கருங்கல் 3 ஆகியவற்றை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி மேற்படி சாட்சிகளின் கையொப்பங்களைப் பெற்றார்.

பின்னர் சாட்சிகள் சையத் ஜாபர், காதர் மகன் சாதிக், இம்ரான், சையத் அல்லா பக்ஷ் மகன் சாதிக், அஷ்ரப் மற்றும் முகமது ஷெரிப் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளைத் தேடி வந்த நிலையில் அன்றயை தினமே மாலை 03.30 மணிக்கு ஊசூரான் பட்டி பஸ் ஸ்டாப்பிடம் இருந்த 5 ஆம் எதிரி அமிர்தலிங்கம் என்பவரை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தார். மற்ற எதிரிகள் முன்ஜாமீன் பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை.

வழக்குச் சொத்தான சுமார் 3 அடி நீளமுள்ள மர தடி 4 மற்றும் கருங்கல் 3 படிவம் 91 மூலம் முறைப்படுத்தி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர். மின்னரசி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழை பெற்றார். பின்பு அ.சா.2, அ.சா.3 ஆகியோருக்கு சிகிச்சையளித்த மருத்துவர். செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ்களை பெற்றார்.

புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும் படிவம் 91 அ.சா.ஆ.7 ஆகவும் அ.சா.1 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆகவும் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆகவும் வழக்குச் சொத்தான சுமார் 3 அடி நீளமுள்ள மர தடி 4 மற்றும் கருங்கல் 3 சா.பொ.1 வரிசை ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேலே கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் சொன்னபடி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொன்னபடி சொன்ன நேரத்தில் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் நான் சொன்னபடி வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும், சொன்னபடி சொன்னவிதத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

S/d–J.Jayganesh.,B.Tech.,B.L.,
Judicial Magistrate(FAC),
Gudiyattam.